O.S.No. 115/2020 நாள் 06.06.2025 PW 3 – திருமதி. பெரியநாச்சி

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை(பிரதிவாதிகள்தரப்பில்)

வழக்கு சொத்துக்கள் எல்லாம் ஆத்திக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ஆத்தி எனக்கு என்ன உறவு என்றால் அப்பா. இந்த சொத்துக்களை 08.10.1957 மற்றும் 20.11.1975, 28.05.1982, 13.09.1991 ஆகிய தேதியிட்ட கிரைய பத்திரங்கள் மூலம் வாங்கி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். வழக்கின் 2 வது தபசில் சொத்தை 30.03.2021 அன்று கிரையம் மூலம் வாங்கி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். சொத்து சம்மந்தப்பட்ட பட்டா எல்லாம் எனது அப்பா பெயரில் ஏற்பட்டு அவர் தீர்வை செலுத்தி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1966 ஆம் ஆண்டு பிறந்தேன். என்னை திருமணம் செய்து கொடுத்தது எனது அப்பா என்றால் சரிதான். அவரது தகுதிக்கு ஏற்ப சீர்சீராட்டுக்கள் செய்து திருமணம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். இந்த சொத்துக்கள் எல்லாம் என் அப்பாவின் தனிப்பட்ட சொத்து என்றால் நாங்கள் அனைவரும் சேர்ந்து உழைத்து வாங்கினோம். இந்த சொத்துக்கள் எவ்வளவு ரூபாய்க்கு யாரிடமிருந்து கிரையம் பெறப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. 13.03.2020 ல் நான் எனது வழக்கறிஞர் மூலம் வா.சா.ஆ– 9 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு எனது தகவலின்பேரில் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதில் பாரா 2 ல் வழக்குரை தபசில் சொத்துக்களும் ஆத்தியின் பெயரிலிருந்து பிரதிவாதியின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்ட சொத்துக்களும், இறந்துபோன ஆத்தியின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் பாரா 4 ல் இறந்து போன ஆத்தி சுய சம்பாத்திய சொத்துக்களும், பட்டா மூலம் பெறப்பட்ட சொத்துக்களும் எங்களுக்கு பங்கு கிடைக்கக்கூடியது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த அறிவிப்பில் சொத்துக்களை கிரையம் பெறுவதற்கு நாங்கள் உழைத்ததாக சொல்லவில்லை என்றால் நாங்களும் சேர்ந்து உழைத்து கிரையம் பெற்ற சொத்துக்களாகும். இந்த தாவா சொத்துக்கள் எல்லாம் எனது தகப்பனார் ஆத்தியின் தனிப்பட்ட கிரைய சொத்துக்கள் என்றாலும், நாங்கள் உழைத்து சேர்ந்து கிரையம் பெற்றதாக சொல்வது தவறு என்றாலும் சரியல்ல. இந்த சொத்தில் ஒருபோதும் கூட்டாக அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. 13.03.1995 அன்று எனது தகப்பனார் ஆத்தி சுய அறிவுடனும், சுய சிந்தனையோடும், ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தை எழுதி வைத்துள்ளார் என்றால் இல்லை. 2 வது வாதி மூக்கம்மாள் யாரை திருமணம் செய்துள்ளார் என்றால் சங்கரவடிவேல் என்பவரை திருமணம் செய்துள்ளார். என்னை கிருஷ்ணன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 4 ம் வாதி செல்வா என்பவரை சேகர் என்பவருக்கு

திருமணம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதன்படி திருமணத்தின்போது குலவழக்கத்தின்படி செய்ய வேண்டிய சீர்சிராட்டுக்கள் அனைத்தையும் செய்தார்கள் என்றால் சரிதான். 5ம் வாதி தனலெட்சுமிக்கு திருமணம் முடியவில்லை என்றால் சரிதான். அவருக்கு திருமணத்திற்கு தேவையான நகைகள், மற்றும் சீர்சீராட்டுக்கள் அனைத்தையும் எனது தகப்பனார் சேர்த்து வைத்திருந்தார் என்றால் சரிதான். எங்களுடன் பிறந்தது ஒரே சகோதரன் முத்துராஜ் என்றால் சரிதான். அவர் எப்பொழுது இறந்தார் என்றால் 1991ல் இறந்தார். அவருக்கு 1முதல் 3 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். என் அண்ணன் இறந்தபிறகு பிரதிவாதிகளை கவனித்து வந்தது எனது அப்பா என்றால் சரிதான். எனது தகப்பனார் அவரது ஆயுளுக்கு பிறகு குடும்பத்திற்கு சண்டை சச்சரவுகள் வரக்கூடாது என்பதற்காகவும், பெண் மக்களுக்கு சீர்சிராட்டுக்கள் செய்து விட்டதாலும், அவரது ஒரே மகனான முத்துராஜின் மகனான 3ம் பிரதிவாதிக்கு அவரது 40 வயதிற்கு பின்பு 1ம் தபசில் சொத்தை அடைந்து கொள்ள வேண்டும் என்றும், அவர் மைனராக இருந்தால் 1ம் பிரதிவாதியான அவரது தாயார் மேற்படி சொத்தை பராமரித்து வரவேண்டும் என்றும், 3ம் பிரதிவாதி 40 வயது அடையும் வரை மேற்படி சொத்தை வில்லங்கம் செய்யக்கூடாது என்றும், உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்குரை 2ம் தபசில் சொத்துக்களை பொறுத்து எனது தகப்பனார் ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவண எண். 56/2003 என்ற எண் கொண்ட உயில் ஆவணத்தை யாருடைய தூண்டுதலுமின்றி எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. 2வது தபசில் சொத்தை பொறுத்தும் குடும்பத்திற்குள் சண்டை சச்சரவுகள் வரக்கூடாது என்பதற்காக 2வது தபசில் சொத்தை பொறுத்து 3ம் பிரதிவாதிக்கு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. 17.02.2019 அன்று எனது அப்பா இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதற்குபிறகு மேற்படி உயில் ஆவணம் அமலுக்கு வந்து 3ம்பிரதிவாதி 1,2 தபசில் சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. சொத்துக்களின் வருவாய் துறை ஆவணங்களான பட்டா எல்லாம் 3ம் பிரதிவாதி பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் என் அப்பா பெயரில்தான் உள்ளது. மேற்படி சொத்திற்கு 3ம் பிரதிவாதி தீர்வை செலுத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் தபசில் 1 இலக்க சொத்தில் வீடு உள்ளது அதில்தான் பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் அதில் எங்கள் அம்மா, அப்பா குடியிருந்து வந்தார்கள். அந்த வீடு எந்த தெருவில் உள்ளது என்றால் முதல் தெருவில் வடக்கு தெருவில் உள்ளது. இந்த வீட்டில்தான் பிரதிவாதிகள் நாளது தேதிவரை குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். இந்த சொத்துக்களை நாங்கள் ஒருபோதும் கூட்டாக அனுபவம் செய்தது இல்லை என்றாலும், 3ம் பிரதிவாதி மட்டும்தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் என் அம்மாவிடம் கேட்டால்தான் தெரியும். இந்த சொத்துக்களை நாங்கள் ஒருபோதும் கூட்டாக அனுபவம் செய்தது இல்லை என்றால் என் அப்பா காலம் வரை நாங்கள் கூட்டாகத்தான் அனுபவம்செய்து வந்தோம், அதன்பிறகு பிரச்சனை

வந்துவிட்டது. பிரச்சனைக்கு பிறகு நாங்கள் அனுபவிக்கவில்லை. என் தகப்பனார் காலம் வரைக்கும் நாங்கள் அனுபவித்ததாகவும், அதன்பிறகு பிரச்சனை வந்ததாகவும், அதன்பிறகு நாங்கள் அனுபவிக்கவில்லை என்று பிராதில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. உயில் ஆவணம் பற்றி விவரங்கள் என் அப்பா எழுதிய காலத்திலேயே எனக்கு தெரியும் என்றால் என் அப்பா உயில் ஆவணம் எழுதிக்கொடுக்கவில்லை. தபசில் சொத்துக்களில் எங்களுக்கு எந்த பாகமும் கிடைக்கக்கூடியதல்ல என்றாலும், தபசில் சொத்துக்கள் 3ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்டு அவரது தனித்த அனுபவத்தில் உள்ளது என்றாலும், அதில் பாகம் கேட்பதற்கு எங்களுக்கு உரிமையில்லை என்றாலும் சரியல்ல. என் அப்பா எழுதிய உயில் அவர் இறந்த பிறகு அது அமலுக்கு வந்து 3ம் பிரதிவாதிதான் அந்தசொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.